# செப்டம்பர் - 19 - செவ்வாய்
## புனித ஜனாறியுஸ்

**முதல் வாசகம் : 1 திமோத்தி 3 : 1 – 13**

சகோதர சகோதரிகளே! சபையைக் கண்காணிக்கும் பொறுப்பை நாடுகிற எவரும் மேன்மையானதொரு பணியை விரும்புகிறார். இக்கூற்று உண்மையானது. ஆகவே, சபைக் கண்காணிப்பாளராக இருப்பவர் குறைச் சொல்லுக்கு ஆளாகாதவராயும் ஒரு மனைவி கொண்டவராயும், அறிவுத்தெளிவு, கட்டுப்பாடு, விருந்தோம்பல், கற்பிக்கும் ஆற்றல் ஆகியவற்றை உடையவராயும் இருக்க வேண்டும்.அவர் குடிவெறிக்கும் வன்முறைக்கும் இடங்கொடாது, கனிந்த உள்ளத்தவராய் இருக்க வேண்டும் சண்டையையும் பொருளாசையையும் தவிர்ப்பவராக இருக்க வேண்டும்தமது சொந்தக் குடும்பத்தை நல்ல முறையில் நடத்தி, தம் பிள்ளைகள் பணிவுடனும் மிகுந்த கண்ணியத்துடனும் வளர ஆவன செய்பவராக இருக்க வேண்டும்.தமது சொந்தக் குடும்பத்தை நடத்தத் தெரியாத ஒருவரால், கடவுளின் சபையை எவ்வாறு கவனிக்க முடியும்?திருச்சபையில் புதிதாகச் சேர்ந்த ஒருவர் கண்காணிப்பாளராகக்கூடாது. அவ்வாறு ஆவாரானால் அவர் தற்பெருமை கொள்ளலாம். அதனால் அலகைக்குக் கிடைத்த தண்டனையை அவர் அடைய நேரிடும்.சபைக் கண்காணிப்பாளர் திருச்சபைக்கு வெளியே உள்ளவர்களிடமும் நற்சான்று பெற்றவராயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர் இழி சொல்லுக்கு ஆளாகலாம் அலகையின் கண்ணியிலும் விழ நேரிடலாம்.அவ்வாறே திருத்தொண்டர்களும் கண்ணிய முடையவர்களாக இருக்க வேண்டும் இரட்டை நாக்கு உள்ளவர்களாகவும் குடிவெறிக்கு அடிமைப்பட்டவர்களாகவும் இருத்தலாகாது. எச்சரிக்கை!தூய மனச்சான்று உடையவர்களாய் விசுவாசத்தின் மறைபொருளைக் காத்து வர வேண்டும்.முதலில் இவர்களைச் சோதித்துப் பார்க்க வேண்டும். இவர்கள் குறையற்றவர்கள் எனக் காணப்பட்டால் திருப்பணியாற்றலாம். அதுபோலவே பெண்களும் கண்ணியமுடையவராயும் புறங்கூறாதவராயும் அறிவுத்தெளிவு உடையவராயும் எல்லாவற்றிலும் நம்பத்தக்கவராயும் இருக்கவேண்டும். திருத்தொண்டர்கள் ஒரு மனைவி கொண்டவர்களாயும், பிளளைகளையும் சொந்தக் குடும்பத்தையும் நல்ல முறையில் நடத்துகிறவாகளாயும் இருக்கவேண்டும்.நன்கு திருத்தொண்டு ஆற்றுவோர் உயர் மதிப்புப் பெறுவர். இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள நம்பிக்கையைக் குறித்து அதிகத் துணிவோடு பேசுவர்.

**பதில்பாடல் :** தூய உள்த்தோடு உன் இல்லத்தில் வாழ்வேன்

**நற்செய்தி : லூக்கா 7: 11 – 17**

அக்காலத்தில் இயேசு நயீன் என்னும் ஊருக்குச் சென்றார். அவருடைய சீடரும் பெருந்திரளான மக்களும் அவருடன் சென்றனர். அவர் அவ்வூர் வாயிலை நெருங்கி வந்தபோது, இறந்த ஒருவரைச் சிலர் தூக்கி வந்தனர். தாய்க்கு அவர் ஒரே மகன் அத்தாயோ கைம்பெண். அவ்வூரைச் சேர்ந்த பெருந்திரளான மக்களும் அவரோடு இருந்தனர். அவரைக் கண்ட ஆண்டவர், அவர்மீது பரிவுகொண்டு, ”அழாதீர்” என்றார். அருகில் சென்று பாடையைத் தொட்டார். அதைத் தூக்கிச் சென்றவர்கள் நின்றார்கள். அப்பொழுது அவர், ”இளைஞனே, நான் உனக்குச் சொல்கிறேன், எழுந்திடு” என்றார். இறந்தவர் எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கினார். இயேசு அவரை அவர் தாயிடம் ஒப்படைத்தார். அனைவரும் அச்சமுற்று, ”நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியிருக்கிறார். கடவுள் தம் மக்களைத் தேடி வந்திருக்கிறார்” என்று சொல்லிக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர். வரைப்பற்றிய இந்தச் செய்தி யூதேயா நாடு முழுவதிலும் சுற்றியுள்ள பகுதிகளிலும் பரவியது.

**தியானம்:** இன்றைய நற்செய்தியை வாசிப்பவர்களுக்கு நமது தாய்நாட்டில் இடம்பெற்ற நிகழ்ச்சிகள் நினைவிற்கு வரக்கூடும். முற்றுமுழுதாக அவ்வாறான ஒரு நிலை இல்லாவிடினும், தனது ஒரே மகனைப் பறிகொடுத்த விதவைத் தாய் ஒருவரை இன்றைய நற்செய்தியில் சந்திக்கின்றோம். தாய்க்கு அவர் ஒரே மகன் என்பதனால் “நயீன்” என்ற ஊரே திரண்டு வந்திருந்தது. இவ்வாறான ஒரு நிலையே அன்று கல்வாரியிலும் இடம்பெற்றிருந்தது. கல்வாரியில் இடம்பெற்ற அனைத்துச் சம்பவங்களும் இன்றைய நற்செய்திக்கு ஏற்ப ஒரே மாதிரியாக இல்லாது இருப்பினும், ஒரு சில விடயங்களில் ஒற்றுமை இருப்பதனை நாம் காணலாம். தனது ஒரே மகனைப் பறிகொடுத்தவளாக நயீம் ஊரின் தாய் போன்று அன்னை மரியாள் கதறி நின்றாள். அங்கு ஜெருசலேம் நகரத்தார் பலர் “வேடிக்கை பார்க்க” கூடி நின்றனர். உழுத நிலம் போன்று உருக்குலைந்த நிலையில் இறைமகன் இயேசு அன்னையின் மடியில் கிடத்தப்பட்டிருந்தார். அவ்வேளயில் அன்னையின் வியாகுலத்தை விபரிக்க முடியுமா?. எனினும் இவ்விரு சம்பவங்களது இறுதி முடிவும் மகிழ்ச்சியைத் தருவதாக அமைந்துள்ளது. “நயீம்” ஊரில் விதவையின் “ஒரே மகன்” இறைமகன் இயேசுவால் உயிர்பெற்று எழுகின்றான். அன்னை மரியாளின் அன்பு மைந்தன் மூன்றாம்நாள் வல்லமையோடும் மாட்சிமையோடும் யூத இராஜ சிங்கமாக உத்தானமானார். எனவே, நாம் பாவ இருளில் மூழ்கி ஆன்மாவில் இறந்தவர்களாக வாழ்ந்தாலும், இறைமகன் இயேசுவின் கருணையால் மீண்டும் புத்துயிர் பெற்று புதுவாழ்வு பெறமுடியும் என்று விசுவசித்து ஏற்றுக்கொள்வோம். பணமும், இவ்வுலக சுகபோக வாழ்வும் எம்மை ஆன்மாவில் இறந்த நிலைக்கு உள்ளாக்கும் என உணருவோம். “உயிர்ப்பும், உயிரும்நானே” என்றவர் எமது “வாழ்வின்வழியும், உண்மையுமாக” இருக்கின்றார் என்பதில் சந்தேகமேயில்லை. எனினும் “நயீம்” ஊரின் இளைஞனைத் தொட்டது போன்று, இறைமகன் இயேசு எம்மைத் தொடுமளவிற்கு அவரை நாங்கள் நம்பி விசுவசித்து ஏற்றுக் கொள்கின்றோமா?